**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No.210/2024**
**வழக்கு சாட்சி PW–13**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரோஜ் அந்தோணி மைனர்ராஜ் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | வியாகப்பன் | தொழில் | : | உதவி ஆய்வாளர் (பணி நிறைவு) |
| கிராமம் | : | வாடியூர் | வயது | : | 63 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday of 05.03.2026.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது காவல்துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். நான் 2023ம் வருடம் ஊத்துமலை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது, கடந்த 26.08.2023ம் தேதி, 16.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்தபோது, சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலின் படி, மருத்துவமனை சென்று பார்த்தபோது, மாயன்குளம் சண்முகையா மகன் வெங்கடேஷ் மற்றும் கனகராஜ் மனைவி கவிக்குயில் ஆகியோர்கள் முதலுதவி சிகிச்சை பெற்று மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டதால் காயம்பட்ட வெங்கடேஷ் என்பவரின் சித்தப்பாவான ஸ்ரீதர் என்பவர் கொடுத்த புகார்மனுவைப் பதிவு செய்து, நிலையம் 18.00 மணிக்கு வந்து அதன் தன்மைப்படி காவல் நிலைய குற்றஎண்.178/2023, சட்டப்பிரிவுகள் 294(பி), 342, 307, 324,

326, 506(2) இதசவின் படி முதல் தகவல்அறிக்கை பதிவு செய்து, அதன் அசலை ஆலங்குளம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும், ஒரு நகலை காவல் ஆய்வாளர் பார்வைக்கும் வைத்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.10 ஆகும். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>** –

ஸ்ரீதர், வெங்கடேஷின் உறவினர் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கை நான் புலன் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு குறித்து நேரடியாக எனக்கு தெரியாது என்றால் புகார் மனு பெற்று முதல்தகவல்அறிக்கை மட்டும் நான் பதிவு செய்தேன்.

**<u>மறுவிசாரணை</u>** –

இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.03.06 18:33:38 +0530